சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அமர்வு வழக்கு எண் 56/2025

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 5 (LW- 7) | நாள் | 19.09.2025 |
| பெயர் | துர்காதேவி | தொழில் | |
| கணவர் பெயர் | ஆனந்தகுமார் | கிராமம் | |
| தாலுக்கா | | வயது | |

(குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் முட்டம் வடக்கு தெருவில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். இறந்துபோன ஹரிஷ் மற்றும் ஹரிசக்தியை தெரியும். அவர்கள் இருவரும் மூவேந்தன், தங்கதுரை, ராஜ்குமார் ஆகியோரால் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டார். ஆஜர் எதிரிகளில் முதலில் நிற்பவர் தங்கதுரை, இரண்டாவது மூவேந்தன், மூன்றாவது ராஜ்குமார், நான்காவது முனுசாமி, ஐந்தாவது மஞ்சுளா, 6வது சஞ்சய் ஆகியோரை சம்பவ இடத்தில் பார்த்தேனா என்றால் பார்த்தேன். 3ம் எதிரி ராஜ்குமார் 4, 5 எதிரிகளின் மகள் காயத்ரியை காதலித்து திருப்பூருக்கு அழைத்து சென்று திருமணம் செய்து கொண்டார். ராஜ்குமார், காயத்ரியை அழைத்து சென்று திருமணம் செய்து கொண்டதால் ராஜ்குமார் மீது தங்கதுரை, மூவேந்தன், மஞ்சுளா, முனுசாமி மற்றும் தங்கதுரையின் தங்கை மாலினி ஆகிய ஒட்டுமொத்த குடும்பமும் ராஜ்குமார் மீது கோபமாக இருந்தார்கள். அதனால் ராஜ்குமாரை ஊருக்குள் வரக்கூடாது என தங்கதுரை, மூவேந்தன் ஆகியோர் தெருபசங்களுடன் சேர்ந்து கொண்டு தடைவிதித்ததார்கள். கொஞ்ச நாள் கழித்து ராஜ்குமார் குடும்பமும்

முனுசாமி குடும்பமும் ராசியாகிவிட்டார்கள். பிறகு ராஜ்குமார், தங்கதுரை, மூவேந்தன் ஆகிய மூவரும் தெரு பசங்களான தினேஷ், ஆதித்யா, அஜய், ஹரிஷ், மற்றும் சிலரை பார்த்து காரி துப்புவது, ஆபசமான வார்த்தைகளால் திட்டுவது என இருந்தார்கள். சில நாட்கள் கழித்து மூவேந்தனுக்கும் தினேஷிற்கும் சண்டை இருந்தது. மூவேந்தன் வீட்டருகில் தினஷே் தன் பிறந்த நாளை முன்னிட்டு நண்பர்களுடன் கேக் வெட்டி கொண்டாடினார். அப்போது அவர்கள் ஆபாசமாக பேசிக்கொண்டதாகவும் அதற்கு மூவேந்தன் ஏன் என் வீட்டருகில் பேசுகிறீர்கள் என்று தினேஷை அடித்து விட்டதாக கேள்விப்பட்டேன். அதன்பிறகு 13.02.2025 அன்ற மதியம் மூவேந்தனை பார்த்து தினேஷ் நரி போன்று ஊளையிட்டு சென்றதாகவும் மூவேந்தன் தினேஷை பார்த்து என்னை பார்த்து ஏன் ஊளையிடுகிறாய் என்று சொல்லி கண்ணத்தில் அறைந்ததாக கேள்விப்பட்டேன். அதன்பிறகு மறுநாள் 14.02.2025 அன்று இரவு சுமார் 8.30 மணியளவில் எங்கள் தெரு முக்கூட்டில் ஒரு அடிபம்பு உள்ளது அந்த அடிபம்பை சுற்றி கட்டை உள்ளது அந்த கட்டையில் அஜய், ஹரிஷ், ஹரிசக்தி, தினேஷ் ஆகிய நான்கு நபர்களும் தங்கள் போனை பார்த்து கொண்டிருந்தார்கள். அப்போது மாணிக்கம் வீட்டருகில் நான் கரிகாலசோழன், தீபா, மணிகண்டன் ஆகியோர் பேசிக்கொண்டிருந்தோம் அப்போது அங்கே பம்படி கட்டை அருகில் முனுசாமியும் மஞ்சுளாவும் வந்தார்கள். மஞ்சுளா தினேஷை பார்த்து ஏன்டா என் மகனை பார்த்து ஊளையிட்டு வந்தாய் பரதேசி நாய்களா தேவுடியா மகன்களா என்று ஆபாசமாக பேசினார்கள். என் மகன்கள் வந்தால் உன் குடலை உருவிவிடுவார்கள் என்று சொன்னார். அவர் சொல்லிக்கொண்டிருக்கும்போதே தங்கதுரை, மூவேந்தன், ராஜ்குமார் ஆகியோர் ஆளுக்கொரு கத்தியுடன் வந்தார்கள். அப்போது தங்கதுரை தினேஷை பார்த்து ஏன்டா என் தம்பி மூவேந்தனை

பார்த்து ஊளையிட்டாய், என்று கேட்டார். அதற்கு தினஷே் நான் ஊளையிடவில்லை சும்மாதான் வந்தேன் என்று சொன்னார். நீங்கள் என்ன நினைத்து கொண்டிருக்கிறீர்கள் எங்களிடமே வருகிறீர்கள் என்ற சொல்லி ஆபாசமாக குச்சிக்காரி மகனே தேவுடியா மகனே என்று திட்டி தங்கதுரை தன் கையில் வைத்திருந்த கத்தியால் தினேஷை குத்தமுயன்றபோது ஹரிசக்தி என்ன அண்ணே பேசிக்கொண்டிருக்கும்போது கத்தியை ஓங்குகிறீர்கள் என்று சொன்னார். அதற்கு தங்கதுரை நீ என்ன வக்காலத்து வாங்குறியா என்று சொல்லி நீ செத்து ஒழிடா என்று சொல்லி கத்தியால் ஹரிசக்தியை கத்தியால் வயிற்றில் குத்த ஓங்கும்போது ஹரிசக்தி திருப்பி கொண்டதால் ஹரிசக்தியின் இடது பக்க பட்டக்ஸில் கத்திக்குத்தி விழுந்தது. அதனால் ஹரிசக்தி கீழே விழுந்துவிட்டார். கீழே விழுந்த ஹரிசக்தியின் நெஞ்சில் தங்கதுரை கத்தியை திருப்பு மாங்கு மாங்கு என்று குத்தினார். பிறகு மூவேந்தன் ஹரிஷை கத்தியால் குத்தினார். குடல் வெளியே வந்துவிட்டது. அதை பார்த்த அவரின் தம்பி அஜய் அதை தடுக்க சென்றபோது ராஜ்குமார் கத்தியால் அஜயை குத்த சென்றபோது அதை தடுத்த போது இடது பக்க கட்டைவிரலில் வெட்டுவிழுந்தது. அதை பார்த்து நாங்கள் அருகில் சென்றபோது ராஜ்குமார், மூவேந்தன், தங்கதுரை ஆகிய மூவரும் எங்களிடம் வைத்து கொண்டால் உங்களுக்கும் இதே கதி தான் என்று சொல்லிவிட்டார்கள். நாங்கள் பின்பு அவர்கள் இருவரையும் பார்த்தபோது ஹரிசக்தி ரத்தவெள்ளத்திலும் ஹரிஷ் குடல் சரிந்தும் கிடந்தார்கள் அவர்கள் இருவரையும் இருசக்கரவகானம் மூலம் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பினோம். அங்கு மருத்துவர்கள் அவர்கள் இறந்துவிட்டதாக சொன்னார். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

A Dyaly

**1 முதல் 5 குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை**

மாணிக்கம் வீட்டு வாசலில் நிற்கும்போது மஞ்சுளா வடக்கு திசையிலிருந்து வந்தார். பம்படிக்கும் மஞ்சுளா வீட்டிற்கும் கொஞ்ச தூரமிருக்கும் அளவு தெரியவில்லை. நான் அதே ஊரில் பிறந்து வளர்ந்தவர். பிஏ பொருளாதாரம் படித்துள்ளேன். சம்பவத்தின்போது தினேஷை பார்த்து பேசியதில் இருந்து சுமார் கால் மணிநேரம் நடந்தது. அந்த கால் மணிநேரமு் நாங்கள் சம்பவ இடத்திற்கு அருகில் வரவில்லை மாணிக்கம் வீட்டு வாசலில் தான் இருந்தோம். குத்துபட்டு கீழே விழுந்தவுடன் தான் சம்பவ இடத்திற்கு வந்தோம். எங்களை போல் சுமார் 10 பேர் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு போய் ஹரிஷ்க்கும் ஹரிசத்திக்கும், அஜய்கும் ஆகியோருக்கு உடம்பில் எந்தெந்த இடத்தில் காயம் ஏற்பட்டது என்று தெரிந்து கொண்டேன். நாங்கள் நான்கு பேரும் காயம் பட்டவர்களை மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை. சம்பவம் நடந்த ஒரு அரைமணிநேரத்தில் பஸ் மூலமாக மருத்துவமனைக்கு சென்றோம். நாங்கள் அங்கு சென்றவுடன் இருவருமே இறந்துவிட்டதாக அங்கிருந்த அவர்களை டூவீலரில் அழைத்து வந்த தெருக்காரர்கள் சொன்னார்கள். ஆய்வாளர் என்னை விசாரித்தபோது மூவேந்தன் வீட்டிற்கு எதிரில் நடுரோட்டில் பெரிய கத்தியை கொண்டு கேக் வெட்டியும் ஆபாசமாக பேசிக்கொண்டிருந்தவர்களை மூவேந்தன், தினேஷ் ஐ கண்டித்தபோது இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு மூவேந்தன் தினேஷை அடித்துவிட்டதாக கேள்விப்பட்டேன் என்று சொல்லியுள்ளேன். நான் காதல் திருமணம் செய்து கொண்டேன். எங்கள் திருமணத்திற்கு எங்கள் கிராமத்தில் எந்த தடையும் விதிக்கவில்லை. இந்த சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் கரிகாலசோழன், கனிவண்ணன்

ஆகியோர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எதிரிகளை யாரையும் சம்பவ இடத்தில் பார்க்கவில்லை என்றாலும் எதிரிகளும் வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**6ம் குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை**

6 வது எதிரியை சம்பவ இடத்தில் பார்த்ததாக முதல் விசாரணையில் சொன்ன சங்கதியை போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். எனக்கு சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்றாலும் இறந்தவர்கள் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

A. Dj...

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

14/9/16

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை